


நடிகர் நாசரிடம் ஜெயந்தன் படைப்பிலக்கிய விருது பெறும் ரா செந்தில் குமார்



கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளாக தோக்கியோவில் வசிக்கும் நமது நீண்ட கால நண்பர் ரா. செந்தில் குமாருடைய இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான பதிமூன்று மோதிரங்கள் 2024ஆம் ஆண்டிற்கான **ஜெயந்தன் படைப்பிலக்கிய விருது** பெற்றுள்ளது. தி ஜானகிராமனின் தஞ்சை மணத்தையும் முராகாமியின் வசீகரத்தையும் வரித்துக்கொண்ட எழுத்து நடையில் சமகால ஜப்பானிய சமூகத்தையும் வாழ்வியலையும் தன்னுடைய சிறுகதைகளில் கொண்டுவரும் செந்தில், ஒரு இலக்கிய செயல்பாட்டாளராகவும் துளிக்கனவு என்கிற இலக்கிய வட்டத்தைத் துவக்கி தமிழ் இலக்கிய ஆளுமைகளை தோக்கியோவிற்கு வரவழைத்து இலக்கிய செயல்பாடுகளை முன்னின்று நடத்தி வருகிறார்.

**எங்கள் ஊக்கமும் பாராட்டும் !**



முதல்வர் ஸ்டாலினிடம் கணியன் பூங்குன்றனார் விருது பெறும் கமலக்கண்ணன்



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 2025 ஜன. 12ம் தேதி அயலகத் தமிழர் தினத்தன்று ***'கணியன் பூங்குன்றனார்'*** விருது பெற்ற கமலக்கண்ணனுக்கு எமது மனமார்ந்த பாராட்டு! ஐந்தாண்டுகளுக்கும் மேலாக ஜப்பானில் வசித்துவரும் கமலக்கண்ணன் பாரதி விழா, பாரதிதாசன் விழா, பெரியார் – அண்ணா பிறந்த நாள் விழா, உலக அறிவியல் நாள் என்று பலவகையான நிகழ்ச்சிகளை தோக்கியோவில் மக்கள் சிந்தனைப்பேரவையின் ஜப்பான் கிளை மற்றும் வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் மூலம் ஒருங்கிணைத்து வருகிறார். பதிமூன்றாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட ஜப்பானியக் கவிஞர்கள் நூறுபேர்களின் தலைசிறந்த கவிதைகளின் தொகுப்பான 百人一首 வை பழங்குறுநூறு என்ற பெயரில் தமிழில் வெண்பாக்களாக மொழிபெயர்த்து வருகிறார்.

**எங்கள் ஊக்கமும் பாராட்டும் !**